527

உ

சிவகணபதி துணை.

ஆடூர்
ஸ்ரீ மாரியம்மன் தோத்திரம்.

இஃது

கூடலூர் தாலூக்கா ஆடூர்

417

527
3/12

மகா-ள-ள-ஸ்ரீ N. துரையப்ப நயினர்

வேண்டுகோளின்படி

ஷையூர்

பா. நாராயணசாமி படையாச்சி அவர்களால்

இயற்றப்பெற்று

சமரஸசன்மார்க்க சங்காபிமானிகளி லொருவராகிய

காரணப்பட்டு சமரஸ பஜனை

ச. மு. கந்தசாமி பிள்ளையவர்களால்

பார்வையிடப்பெற்று

திருவாரூர்

"எட்வர்ட் அச்சுக்கூடத்திற்"

...னேஜர் T. B. அரங்கசாமிப் பிள்ளையவர்களால்

பதிப்பிக்கப்பெற்றது.

...2-ஹு மார்ச்சு-மீ 26வ.

Q25:38.21193 A
NL
171042

உ

கணபதி துணை.

ஆடூர்

ஸ்ரீ மாரியம்மன் தோத்திரம்.

காப்பு—நேரிசைவெண்பா.

சீரார்ந்த வாடூர்திகழ் மாரியம்மன்மே
லேரார்ந்த சொன்மாலை யேத்துதற்குக்—காரார்ந்த
வானைமுகாசுரனைக்கொன் றண்டர்க்கு வாழ்வளித்த
வானைமுகத்தேவே யருள்.

ஆசிரிய விருத்தம்.

சீரோங்கு செங்கமல மலரோங்கு தேவியாய்த்
திருவோங்க வுலகுகாக்குந்
தெருளோங்கு மன்னையாய்த் திருமாலினுள்ளமுந்
திகழோங்கு தோளுமகலாய்
பேரோங்கு மனைவியாம் பேரோங்குசத்தியைப்
பெரிதோங்கு மண்ணியெனு நின்
பீடோங்கவரு மகிமைபேசிட வனந்தரும்
பின்னோங்குவார்க ளென்னிற்
காரோங்குமாணவக் கடலோங்கு வெம்மனக்
கரிசோங்கு வாழ்விலோங்குங்
கனமோங்கு மேழையேன் கருதரிய நின்னைக்
கணித்தோங்கு மின்படைவனோ
ஆரோங்க நின்னைத் தினந்துதிப்போ ரவர்க்
கருளோங்க வெண்ணுமமுதே
ஆடூரில்வாழ்கின்ற வீராண மாரியெனு
மானந்த மகமாயியே.

திருமரு விரத்தினமிழைத்தமணி மகுடமுஞ்
செண்பகமுடித்த சடையுந்
திங்களொளி வதனமுறு நெற்றியிற் றிலதமுஞ்
செகமெலாங் காணப்பெறுங்
கருணைநிறை நயனமுங் கனகமூக்குத்தியுங்
கண்டமணி தாலியழகுங்
காதினிற் கோமளக்கம்மலும் விலையுறுக்
கதிரெனவிளங்கு கொப்பும்
மருமருவு மார்பணி சரப்பளிபதக்கமும்
வான்பட்டு மொட்யாணமும்
வையகந்துதிபெற்ற கையினிற் கடகமும்
வடிவுடுக்கைச் சூலமும்
அருணிறை பதங்களிற் றண்டை பாடகமிலிர
வடியனேன் காணவருவாய்
ஆடூரில்வாழ்கின்ற வீராணமாரியெனு
மானந்த மகமாயியே. (உ)

சத்தி நீ கௌரி நீ நித்யகல்யாணி நீ சாம்பவிசடாக்கரியு நீ
சகலகலைவாணி நீ புவனபரிபாலி நீ சதுர்வேத தாயகியு நீ
முத்திநீ முடிவுநீ சத்குருசங்காரி நீ மோனவுருவானவளு நீ
மூவுலகமாரி நீ தேவர்கொண்டாடவரு முதலான தேவதையு நீ
பத்திதருசித்தி நீ செமதக்னிபாரி நீ பரசு ராமன்றாயு நீ
படவேட்டமர்ந் திலகுபாலிநீ சூலிநீ பகவதி பராபரையு நீ
அத்திமுன மடுவினின் றலறவந்தருள்செய்த வாதிமூலன் றங்கை நீ
ஆடூரில்வாழ்கின்ற வீராணமாரியெனு மானந்த மகமாயியே. ()

சண்டி பூதேவி கங்காளி வேதாளிநீ சாமுண்டி பைரவியு நீ
சங்கரிசதானந்தி சர்வகாரணியு நீ தற்பரைபயங்கரியு நீ
குண்டலிகுமாரி மாதங்கிபவநாசி நீ குடிலைநா ரணிவாலை நீ
கொந்தலர்க்குழலி நீ கோலிநீ நீலிநீ கோதிலா நான்முகியு நீ

பண்டுறு பரம்பரை சுதந்தரிபராநந்தி பத்தரி தயாம்பரியு நீ
பார்புகழ் மனோன்மணிவராகி கௌமாரிநீ பகராளி மேலூர்திநீ
அண்டங்கள் யாவுமோரடியா யளந்தாண்ட வரிகேசவன் றங்கைநீ
ஆடேரில்வாழ்கின்ற வீராணமாரியெனு மானந்த மகமாயியே. ()

மாடனுடன் லாடனுஞ் சாமுண்டி துர்க்கையும்
வல்லுருத்திர வீரனும்
மருவு காட்டேரி முனிவன் கருப்பண்ணனும்
மாறான பல்லிரிசியுங்
கூடவருகின்ற பாவாடைராயன் றொந்தி
குறளி குட்டிச்சாத்தனுங்
குணமிலாவிருளனும் ரணபத்ரகாளியுங்
கோபவைரவ சின்னனும்
பாடலாடலுமுறுங் கூளியும்பூதமும்
பலமுறுமிராக்க தன்முதற்
பலவிதப் பேயெலாநின் சந்நிதானமது
பணியப் பயந்தோடுமே
ஆடலறவரிய காளிங்கன் மேனடமிடு
மனந்தசயனன் றங்கையே
ஆடேரிவ்வாழ்கின்ற வீராணமாரியெனு
மானந்த மகமாயியே. (௬)

தலைவலி கருங்குட்ட மிருமலொடு ரணமேக
தாமரைகிரந்தி படுவன்
சன்னி பற்பலவகையும் வாதங்களெண்பதுந்
தாங்காத சூலைநோயுங்
குலைவலி பெரும்பாடு பிரமியமகோதரங்
குன்மங்க ளெட்டுவகையுங்
கொடிய வாதச்சுரம் பித்தச்சுரத்தினொடு
கோதுறு சிலேட்டும சுரமுங்
கலையைப்பெருக்கவரு சுவாசகாசம்பிளவை
காணுறு மனந்த நோயுங்

காமாரியுனது வெண்ணீ றணிந்திடவே
கலங்கிப் பயந்தோடுமே
அலைகடலொளித்த வசுரனையன்று வென்றமாற்
கருமந்த தங்கை நீயே
ஆடேரில்வாழ்கின்ற வீராணமாரியெனு
மானந்த மகமாயியே. (௬)

மண்டலந்தனி னின்னையன்றி யொருதெய்வமதை
மனதார வெண்ணவறியேன்
மந்திரம்புதையே வறந்திரஞ்சூனியம்
வைப்பு முதலான யாவுங்
கண்டவுடனின் றனதுசந்நிதியை யன்றே
கதித்தயர்ந்தோட லுறுமே
கன்மங்கள்வெகு கோடிசெய்திருந்தாலு நின்
கருணைநோக்கா னீங்குமே
தொண்டர்பல பேர்கள்பக்கச் சிடற்றேர்ச்சிடற்
சூலமூசிச் சிடலுமே
துன்புறு தாடும்வண்ணஞ் செய்யுநின்மகிமை
சொல்லவென் றலாகுமோ
அண்டருக் கமுதமெந்நாளினு மளிக்குமோ
ராதிநாரணர் தங்கையே
ஆடேரில்வாழ்கின்ற வீராணமாரியெனு
மானந்த மகமாயியே. (௭)

பெரியம்மை சின்னம்மை கொத்தமலியம்மையும்
பேர்கொண்டபா லம்மையும்
பிழைசெயுங் கொள்ளம்மை சிறியவாகம்மையும்
பேசிடுங் கல்லூரியுங்
கரியம்மை கடுகம்மை கார்பனசை யம்மையுங்
கனமான நீர்துளுவனுங்

காற்றூரு முப்பம்மை மெழுகம்மை வெந்தயங்
　　கார்தவளை யம்மையுடனே
பரிதிபோ லொளிர்கின்ற சிறிய பாசிப்பயிர்ப்
　　பலவுமிச்சிரி யம்மையும்
பாரதனிலழகான விச்ராமியம்மையொடு
　　பாவுநினையா ரறிகுவார்
அரிநமோ நாராயணாய வெனுநாலிரண்
　　டக்கரத்தோன் றங்கையே
ஆடூரில்வாழ்கின்ற வீராணமாரியெனு
　　மானந்த மகமாயியே. (அ)

மிடிசெயும் வறுமையானுப்புற்ற பாண்டமென
　　மெய்யெலா முள்ளுடைந்தே
வீறுதசெல்வர்தந் தலைவாயுழன்று நான்
　　வேண்டிய விதங்களாகப்
படிமிசைப் பொய்யுரைத்துண்டு வாழ்கின்றவிப்
　　பாழ்சனனமினி வேண்டிலேன்
பாரதிகபாலி திரிசூலியென வோலமிடு
　　பாலன்முறை கேட்கவிலையோ
கொடியனென்றாலு நற்றாய்பிழை பொறுப்பளே
　　கொஞ்சமு மிதக்கமிலையோ
கோதிலாவம்மையே யஞ்சலென வந்தெனது
　　குறைதவிர்த்தாள நினைவாய்
அடியவர்க் கனுகூலவென்றழுந் துரோபதைக்
　　கபயமீந்தோன் றங்கையே
ஆடூரில்வாழ்கின்ற வீராணமாரியெனு
　　மானந்த மகமாயியே. (கூ)

பெற்றதாய் நீயலதுவேறிற்லை யுலகினிற்
　　பிள்ளையா னென்னம்மணீ
பேசாதிருப்பதா லென்செய்வே னேழையேன்
　　பேதை முன்செய்த வினையோ

பற்றநின் றிருவடிப் பண்பொன்று மறியாத
பாவியேன் றுயர்யாவு நீ
பரிகரித்தாளுவாய் மூடனேனாயினும்
பாராதிருப்ப தறமோ
வுற்றவரை யாதரித்துல கெங்குமோங்குமோ
ரோங்காரி ரீங்காரியா
யோரெழுத்தீ ரெழுத்தைந்தெழுத் தெட்டெழுத்
தொளியாகிநின்ற பரையே
அற்றதொன்றாக மெய்யுரை யென்ன வைவர்க்
கறைந்தநெடுமால் தங்கையே
ஆரேரில்வாழ்கின்ற வீராணமாரியெனு
மானந்த மகமாயியே. (க0)

சலந்தனிற் குமிழியென மின்னலெனவுள்ளதித்
தரணியிற் றேகமம்மா
தந்தைதாய்மக்களும் பெண்டுடன் சுற்றமுஞ்
சந்தையிற் கூட்டமாமே
நிலந்தனிற் றுய்க்கின்ற வாழ்விந்திர சாலமே
நிலையுளது நின்றனருளே
நிந்தனைகளைபுரியு மைந்தனென்றாலுமா
நிமலியேதயை செய்குவாய்
கலந்து துன்பஞ்செயுமனதை நல்வழியினின்
கருணையாற்செல விடுத்துக்
கடிமலர்ப்பா தத்தையேநினைந் துய்யக்
கடைக்கணித் தருள்செய்குவாய்
அலர்ந்த செந்தாமரையில் வாழிலக்குமி யையன்
பாலணையுமால் தங்கையே
ஆரேரில்வாழ்கின்ற வீராணமாரியெனு
மானந்த மகமாயியே. (கக)

கீர்த்தனை.

இராகம்-உசேனி—ரூபகதாளம்.

பல்லவி.

மகமாயீ மனமுவந்தருள்வாய்—மாதவர்கள்போற்றும்
மகமாயீ மனமுவந்தருள்வாய்.

அனுபல்லவி.

இகமதிற்பல வளங்கணிறையும்
எழிலுறுமாரேர் நகரிலுறையும். (மக)

சரணங்கள்.

க. மாநிலத்திற் சிவபூசை காருண்ணியம்
மறந்தவரேற் கவவர்கண்ணியம்
மாறிட வேப்பிலையேந்தப் புண்ணியம்—வரப் புரிந்திடுவாய்
மாதங்கி நினதுமகிமையை யாரும்
மதிக்கவறியா ரென்றறிந்துங் கோரும்
வரமதுதாவே—வலிதிலின்றிரவே—மகிழ்சிறந்துவரவே. (மக)

உ. மண்ணினி லெவ்வுயிர்களையு நீ பெற்றாய்
மக்களைக்காத்திட நீயேதனி நற்றாய்
மாரியென்றே யாருந்துதிக்கவும் பெற்றாய்—மாதவி நீயே
புண்ணினைமுத்தாகப் பொருந்தவிடுக்கும்
புலைகொலை செய்யுஞ்சனன மெடுக்கும்
புன்மையைக்கெடுத்தே—பொதுநலங்கொடுத்தே—புண்ணிய
[த்தையடுத்தே (மக.)

ங. சகமதிலுறுமுயிர்க ளுடலைச்
சல்லடைக்கண்களாக விடலைச்
சகியாமற்பெருந் துன்பப்படலைச்—சாற்றிடவருமோ
சர்வசத்தியுன்றன் றிருவுள்ளங்கொண்டு
தவிர்த்திடிற்சிற் றடியேமென் றுந் தொண்டு
தாழ்த்திடப்படுமா—சற்றுமறந்திடுமா—தருநின்பதங்கெடுமா.

௬. பலகலையுணர் புலவர்களென்று
பாரினிற் பேதையர்களை வென்று
பண்டம் பறிக்குமவர்களுக் கென்று—பவமறப்புரிவாய்
கலகமு மிலம்பாடு மொழித்துக்
கடைக்கணிப்பா லெம்மலமுமழித்துக்
கடத்தியெம்வினையே-கதிதரநினையே-கருதிடுமெம்மனையே.

நேரிசை வெண்பா.

வாரிசூழம்புவியில் வாழ்கின்ற வெவ்வுயிரும்
மாரியெனப்போற்று தமிழ்மாலையினைப்—பாரில்
மனத்தாற் பொருணினைத்து வாக்காற்றுதிப்போ
ரினத்தாரு நன்கடைவரே.

வாழி விருத்தம்.

வாழிமா மறைவாழி மறையவர்
வாழியா னிரைவாழி யுலகெலாம்
வாழி மாதமும்மாரியு மாரேல்
வாழும்வீராணத் தம்மையும் வாழியே.

சுபம்—சுபம்—சுபம்.

திருவாரூர் "எட்வர்ட் அச்சுக்கூடத்திற்" பதிப்பிக்கப்பெற்றது.